பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி மீ 11 உ சனிக்கிழமை (27-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 235

# இனப்பிரச்சினை நெருக்கடி

# மேலும் மோசமாகும் ஆபத்து!

## அமெரிக்கப் பிரதிநிதி எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை 27

இலங்கை இனப்பிரச்சினை மேலும் மோசமடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் பாரியதோர் அகதிகள் பிரச்சினையை எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம்.

"அகதிகளுக்கான அமெரிக்க கமிட்டி"யைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

அந்தக் "கமிட்டி"யின் சிரேஷ்ட கொள்கை ஆய்வாளரான திரு. கோர்ட் றொபின்ஸன் என்பவரே இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

தமிழ் அகதிகள் நிலைமை குறித்து அறிவதற்காக அண்மையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் விஜயங்களை மேற்கொண்ட அவர், அமெரிக்கா திரும்பியதும் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுகளை அவசர அவசரமாக ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுத

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இறந்த படையினரில் இருவர் உயர் அதிகாரிகள்

கொழும்பு, ஜூலை 27

ஆனையிறவுப் பகுதிச் சண்டையில் கொல்லப்பட்டோரில் ஆனையிறவு இராணுவ முகாமின் பிரதிக் கொமாண்டிங் அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் லலித் புத்ததாஸ, கொமாண்டிங் அதிகாரி லெப்டினன்ட் கேணல் சரத் கருணாரத்னா ஆகியோரும் அடங்கி உள்ளனர்.

லெப். கேணல் கருணாரத்னா முகாமினுள் பாதுகாப்பு ஒருங்கிணைப்புப் பணியைக் கவனித்து வந்தார்.

உயிரிழந்த லெப்டினன்ட் கேணல் புத்ததாஸ மற்றும் 13 சிப்பாய்களின் சடலங்கள் முகாமுக்குள்ளேயே புதைக்கப்பட்டதாக பாதுகாப்புப் படை உயர் அதிகாரி ஒருவர் கூறினார். [இ-உ-எ]

## இந்தியாவுடன் பேச்சு நடத்த அமைச்சர் ஹேரத் பயணம்

இலங்கை வெளிவுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இன்று (சனி) புதுடில்லிக்கு விஜயம் செய்கிறார்.

இந்தியாவில் ஐந்து நாட்கள் தங்கியிருக்கும் அவர் பிரதமர் நரசிம்மராவ் உட்பட முக்கிய தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்துவார்.

இலங்கை இனப்பிரச்சினை, விடுதலைப் புலிகள் விவகாரம், ஈழ அகதிகள் விவகாரம் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து அவர் அங்கு பேச்சு நடத்துவார்.

இரு நாடுகள் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களும் இலங்கை-இந்திய வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையேயான பேச்சுக்களின்போது ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் பேச்சுக்களின் முடிவில் பொருளாதார உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-3)

## ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை 11 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 27

5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையும் ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சையும், தாதியார் தேர்வுப் பரீட்சையும் திட்டமிட்டபடி ஆகஸ்ட் மாதத்திலேயே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புலமைப் பரிசில் பரீட்சையையும் தாதியர் பரீட்சையையும் ஆகஸ்ட் 11 ஆம் திகதி நடத்த ஏற்பாடாகியிருக்கிறது. (உ-3)

## ஜி. சீ. ஈ. (சாதாரண தர) விசேட பரீட்சை விரைவில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

1990 ஆண்டுக்குரிய ஜி.சீ.ஈ. [சாதாரண தர] விசேட பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் 27 ஆம் திகதிக்குப் பின்னர் நடத்தப்படும்.

அடுத்த 3 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. [உயர் தர] பரீட்சை ஆகஸ்ட் 27 ஆம் திகதி முடிவுறுகின்றது. இந்தப் பரீட்சை முடிவடைந்ததும் ஜி.சீ.ஈ.[சாதாரண தர] விசேட பரீட்சையை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெதமுல்ல, யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்துக்கு நேற்று அறிவித்திருக்கிறார். [உ-3]

## மருந்து வருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 27

இரண்டொரு தினங்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "குமண" கப்பலில் மருந்து வகைகளும் எடுத்து வரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## புலிகள் ஆயுதங்கள் வாங்க சுதந்திரக் கட்சி உதவியா?

### சபையில் அமைச்சர் ரணில் கேள்வி

கொழும்பு, ஜூலை 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் இருந்து பெறப்பட்ட நிதி, விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் கொள்வனவு செய்ய பயன்பட்டது என்று சந்தேகம் எழுந்துள்ளது என கைத்தொழில் அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

கூட்டுப்படை தலைமையக

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 22 தமிழர்கள் முந்தலில் கைது

கொழும்பு, ஜூலை 27

முந்தல் நகரில் 22 தமிழர்களை புத்தளம் உதவி பொலீஸ் அதிபர் தயாரத்னா தலைமையில் சென்ற பொலீஸ் கோஷ்டி கைது செய்தது.

அவர்களிடம் அடையாள அட்டைகள் இருக்கவில்லை என்றும் தமது அடையாளங்களை நிரூபிக்கும் வேறு தஸ்தாவேஜுகளும் அவர்கள் வைத்திருக்கவில்லை என்றும் உதவி பொலீஸ் அதிபர் புத்தளம் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அந்தத் தமிழர்களை 12 தினங்கள் காவலில் வைக்கும்படி புத்தளம் நீதிவான் உத்தரவிட்டார். [ஒ-எ]

## லொறி நிறைய ஆயுதம் புலிகளுக்கு அரசு வழங்கியது

### சபையில் சிறிமா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 27

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தை நடந்து வந்த சமயம் அரசு, புலிகளுக்கு பெருமளவு ஆயுதங்களை வழங்கியது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, நேற்று முன்தினம் அவசர காலச் சட்டம் மீதான விவாதத்தில் பேசும்போது தெரிவித்தார்.

இந்திய அமைதிப் படையினரை எதிர்த்து போராடி வந்த புலிகளுக்கு, லொறி நிறைய ஆயுதங்கள் வழங்க இராணுவ உயர் அதிகாரிகளுக்கு அரசு உத்தரவு பிறப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்ற படையினரை மீட்பது குறித்துப் பேச்சு

ஆனையிறவு முகாமுக்குள் படுகாயமடைந்த நிலையில் சிக்கிக் கொண்டிருக்கும் ஐம்பதுக்கும் அதிகமான படையினரை மீட்டெடுப்பது குறித்து யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தி வருகிறார்கள்.

செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் பேச்சுக்கள் பலன் அளிக்கவில்லை என்று யாழ்ப்பாணச் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

# போர் முனைத் தகவல்களை அரசுக்கு படை அதிகாரிகள் ஒளிக்கின்றார்கள்!

கொழும்பு, ஜூலை 27

வடக்கு - கிழக்கில் கடந்த ஒரு வருடமாக நடந்து வரும் நிகழ்வுகளை பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள், தங்கள் பக்கத்துக்குச் சார்பாக திரித்துக் கூறிவருகிறார்கள் என்பது இப்போதுதான் கொழும்புப் [illegible] களுக்குத் தெரியவந்திருக்கிறது.

பல விடயங்களை அவர்கள் பத்திரிகைகளுக்கு — மக்களுக்கு — மட்டுமன்றி அரசாங்கத்திற்கே மறைத்திருக்கிறார்கள் என்று கொழும்புப் பத்திரிகைகளுக்கு இப்போது [illegible] கண்டிக்கவும் தொடங்கி உள்ளன.

ஆனையிறவு முகாம் தாக்குதல், அதற்கு முந்திய ஏற்பாடுகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் பல விடயங்களை ஒளித்துவிட்டார்கள் என்றுகொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றின் ஆசிரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தமிழ்ப் பகுதிகளில் நடப்பவை ஏதோ தொலை தூரத்தில் நிகழ்பவை. அவற்றை மறைத்து விடலாம் என்ற பொய்யான உணர்வுடன் உயர் அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள். பொதுமக்களை இருட்டில் வைத்திருக்கப் பார்க்கிறார்கள். அது

[3ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த 825 – 20 அளவு உடைய நான்கு லொறி ரயர்கள் [ரியூப் மப்ளர் உட்பட] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மாரியம்மன் மோட்டோஸ், கோப்பாய். (17451)

இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் ½ பரப்பு காணி வீட்டுடனும், 6 குழி கொண்ட வெறுங்காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: சி. கனகரத்தினம், சி.சி. பாடசாலைக்கு அருகாமையில், நீர்வேலி. (17300)

### மணப்பெண்கள் தேவை

டென்மார்க்கில் வேலை செய்யும் 29 வயது கத்தோலிக்க உத்தியோகத்தருக்கும், உள்ளூரில் பணியாற்றும் இந்து 25 வயது எலக்றோனிக் என்ஜினியருக்கும், 33 வயது B. Sc. க்கும், 35வயது T. A. க்கும், 33 வயது எக்கவுண்டனுக்கும், செவ்வாய்க் குற்றமுள்ள எலக்றோ லொக்கமோட்டிவ் என்ஜின் Operator க்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (17619)

### மணமகன் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற யாழ். இந்து 27 வயது டாக்டருக்கும், ஆசிரியைக்கும், M.Sc. க்கும், I.C.M.A.க்கும் குற்றமுள்ள 35 வயது டாக்டருக்கும், 26 வயது பெண்ணுக்கும், 28 வயது மணப்பெண்ணுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (17618)

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதங்களிலும் திருமண தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [4175]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். [4206]

## தடைகள் போடப்பட்டு சோதனை

கொழும்பு, ஜூலை 27

மலையகத்தில் ஹட்டன், கினிகத்தேனை, பொகவந்தலாவ ஆகிய இடங்களில் பிரதான பாதைகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு சோதனையிடப்படுகின்றது.

மணல் மூடைகளும் மற்றும் மண் நிரப்பப்பட்ட பரல்களும் தடைமுகாம்களின் முன்னால் வைக்கப்பட்டுள்ளன. [இ-எ]

## சுவிஸில் 72 ஆயிரம் ஈழத் தமிழர்

கொழும்பு, ஜூலை 27

சுமார் 72 ஆயிரம் இலங்கைத் தமிழர் சுவிட்சர்லந்தில் உள்ளனர் என்றும் —

அவர்கள் அகதிகள் அந்தஸ்து கோரி சுவிஸ் அரசுக்கு விண்ணப்பம் செய்துள்ளனர் என்றும் கொழும்பில் உள்ள சுவிட்சர்லந்து தூதர் தெரிவித்தார். [இ-எ]

# பொதுக் கூட்டம்

சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும், அவர்களது ஆசிரியர்களும் இன்று 27-07-91 (சனி) பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்திற்கு தவறாது வருகை தரவும்.

பொதுச் செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்.

[17628]

## சிறுவர் பாடசாலை
# ஆசிரியர் பயிற்சி

**ஆகஸ்ட் 5ஆம் திகதி [05-08-1991] மேற்படி பயிற்சி பெரியபுலம் மகாவித்தியாலயம், நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணத்தில் தொடங்க உள்ளது.**

1. இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர்.
2. 1989 ஆம் ஆண்டுக்கு முன் பயிற்சி எடுத்து சித்தி அடையாதோர்.
3. 1989 ஆம் ஆண்டுக்கு முன் முழுமையான பயிற்சி எடுத்து பரீட்சை எடுக்க தகைமை பெறாதோர்
4. 1990 ஆம் ஆண்டு பயிற்சி எடுக்க தொடங்கி (சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உட்பட) முடிக்காதவர்கள்.
5. 1991ஆம் ஆண்டு பயிற்சி எடுக்க தொடங்கி (வேலணை, ஊர்காவற்துறை உ. அரசாங்க அதிபர் பிரிவு உட்பட) முடிக்காதவர்கள் யாவரும் இப் பயிற்சியில் பங்கு பற்றி, பயிற்சி நிலையத்தினால் 1991 நவம்பர் மாதம் நடத்தப்படும் பரீட்சையில் தோற்றி சித்தியடையும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சித்தியடைந்தோருக்கு சான்றிதழ் வழங்கப்படும். சங்கானை, ஊர்காவற்துறை, கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பயிற்சி எடுத்து 1990 ஆம் ஆண்டு எமது பயிற்சி நிலையத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயிற்சி ஆசிரியர்கள் ஆகஸ்ட் 4ஆம் திகதி (04-08-1991) காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மேற்படி பாடசாலையில் பெயர்களை பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பயிற்சி தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 01-08-1991, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 10-09-1991 இல் தொடங்க உள்ளோம். நடத்தும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

சிறுவர் பாடசாலை
ஆசிரியர் பயிற்சி நிலையம்,
மூளாய்.
Institute of Nursery Studies, Moolai.

[17617]

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## நல்லூர் கந்தசாமி கோவில் 1991ஆம் ஆண்டு மகோற்சவ கால
## தற்காலிக சந்தைகள்

01. நல்லூர் இந்துவிடுதிக்கு அருகாமையிலும்,
02. பண்டார மாளிகை வளவில் தீயணைக்கும் சேவை நிலையத்திற்கு கிழக்குப் பக்கமாகவும்.

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 09 - 08 - 1991 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 50/-ஐயும், மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணையாக ரூபா 250/-ஐயும் செலுத்துவதன் பேரில் 07 - 08 - 1991 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 - 00 மணிவரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப்பிரதிகளில்) கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 09 - 08 - 1991 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் போது தபால் விநியோகத்தில் ஏற்படும் தாமதங்களுக்கு சபை பொறுப்பேற்கமாட்டாது.

இக் கேள்விகள் சம்பந்தமான சகல விவரங்களையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 24 - 07 - 1991. [சி/0305]

# பற்றீஸியன்
## தொழிற்பயிற்சி நிறுவனம்
## PATRICIAN INSTITUTES

### அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் (Care International) இணைந்து எம்மால் நடத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சித் தகைமை:-**
15 வயதும் அதற்கு மேற்பட்டோரும், 8 ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும்.

**பயிற்சிக் காலம்:-**
2½ மாதம் ஸ்தாபன பயிற்சி
10 மாதம் பயிலுனர் வேலையாளர் பயிற்சி

**கொடுப்பனவு:-**
ஸ்தாபன பயிற்சியின் போது மாதம் 600/- வும் 10 மாத பயிலுனர் பயிற்சியின் போது வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

**சான்றிதழ்:-**
பயிற்சி நிலைய பயிற்சி சான்றிதழ், தொழில் பரீட்சை அடிப்படையில் தேசிய (அரசாங்க) தொழில் சான்றிதழ், சர்வதேச ரீதியிலான கெயர் ஸ்தாபன சான்றிதழ்.


**இதர உதவிகள்:-**
பயிற்சி முடிந்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகளை தொடங்க கெயர் ஸ்தாபனத்தின் மூலம் வழி வகைகள் செய்து கொடுக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:-**
பதிவாளர், பற்றீஸியன் தொழிற் பயிற்சி நிறுவனம், 59, சென. பற்றீக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 02 - 08 - 91 க்குப் பிந்தாமல் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பதிவாளர்,
பற்றீஸியன் தொழில் நிறுவனம்.

[சி-0306]

# 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. முத்துக்குமாரு ஸ்ரீகுமார்
[ராசாண்ணை]

அன்னையின் மடியில் 29 – 07 – 1946
அநியாயப் பிடியில் 27 – 07 – 1983

வெலிக்கடை சிறையில் செந்நீர் சிந்தி,
நீ மண்ணில் உதிர்ந்து,
நாம் கண்ணீர்க் கடலிலே மிதந்த நாளினைக்
காலம் மாறினும் எமது உள்ளம் மறக்குமா?
எட்டு வருடங்கள் ஆனபின்பும் எம்
சித்தம் கலங்குதுன் பிரிவை எண்ணி!

சேச் ஒழுங்கை,
உரும்பராய்-கிழக்கு.

உன் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
அம்மா, சகோதரர்,
மாமி, மைத்துனிமார்.

(17455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### குதிரை பின்னால்!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்க அரசு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்திருக்கும் தனிநபர் பிரேரணையை விவாதம் இன்றி நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்வதன் மூலம், அரசியல் தீர்வைத் தான் நாடுவதாகக் காட்டுவதற்கு அரசாங்கம் முனைந்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை வகுப்பதற்காக அனைத்துக் கட்சி மாநாடு இரண்டு வருடங்களுக்கு மேலாக நடைபெற்றது. அதன் மூலம் பலன் தரக்கூடிய விளைவு எதுவும் இல்லாமலே அது கருகிப் போய்விட்டது. அரசும் ஒரு வாறு காலத்தை ஓட்டிவிட்டது.

இனிமேல் தொடர்ந்து காலத்தைப் போக்குவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு நல்ல மேடை என்று அரசு நினைத்திருக்க வேண்டும். அதனால் சுதந்திரக் கட்சி எம். பியான திரு. மங்கள முனசிங்கா முன்னறிவித்தல் கொடுத்திருந்த பிரேரணையைத் தப்பவிடாமல் கவ்விப் பிடித்திருக்கிறது போலும்!

நாடாளுமன்றத்தில் தனிநபர் கொண்டு வந்து நிறைவேற்றும் பிரேரணைகள் ஒரு பொருட்டாக மதிக்கப்படுவதில்லை.

கருத்தாழமான, சுவையான விவாதம் சகிதம்நிறைவேற்றப்படும் தனிநபர் பிரேரணைகள் கூட நடைமுறையில் செயற்படுத்தப்படுவது அரிதிலும் அரிது.

வழமை நிலைமை அவ்வாறிருக்க எதிர்க்கட்சி எம். பியின் இனப்பிரச்சினை சம்பந்தமான தனிநபர் பிரேரணை அரசாங்கத்தைக் கவர்ந்து இழுத்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இதோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடப் போகிறோம் என்று தமிழர் தரப்புக்கும், வெளி உலகத்துக்கும் காட்டிக் கொள்ளும் "சுடுகுது மடியைப் பிடி" என்ற முயற்சி முதலாவது.

அனைத்துக்கட்சி மாநாட்டுக்கு வெளியே நின்ற சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய எதிர்க் கட்சிகளை நாடகத்தில் சேர்த்துக் கொள்ளும் நோக்கம் இரண்டாவது.

தெரிவுக் குழு முடிவு அந்தா வருகிறது இந்தா வருகிறது என்று காலத்தை ஒருவாறு கடத்துவது முக்கியமானதும் மூன்றாவதுமான நோக்கம்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்மையான விருப்பம் இருந்தால், அரசாங்கம், எதிர்க்கட்சிகளுக்கு இணக்கமான ஒரு தீர்வை தயாரிப்பது முக்கியமல்ல. தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை வகுப்பதே முக்கியம்; மிகவும் பிரதான தேவை.

அதாவது, தமிழர்களின் அரசியல், பொருளாதார அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு திட்டத்தை அரசாங்கம் தானே வகுக்கவேண்டும். அடுத்து அந்தத் திட்டத்தை தமிழர்கள் ஏற்கிறார்களா என்பதை அவர்களுடன் கலந்து பேசிக் கண்டறிய வேண்டும். மூன்றாவது கட்டமாகவே தமிழர்கள் ஏற்றுக் கொண்ட தீர்வுக்கு எதிர்க் கட்சிகளின் இணக்கத்தை, உடன்பாட்டைப் பெறவேண்டும்.

அதனை விடுத்து மூன்றாவதாகச் செய்யவேண்டியதை முதலாவதாகச் செய்ய முனைவது குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டுவது போலாகும்.

---

# வானொலி தொடர்பின்றி அதிகாரிகள் திண்டாட்டம்

## படைகள் நிற்குமிடம் தெரியாதாம்

ஆனையிறவு முகாமை விடுவிக்க இராணுவம் அனுப்பிய படை அணிகள் எங்கே நிலை கொண்டுள்ளன என்பதை அறியமுடியாது உள்ளது.

கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் இப்படிக் கூறினார் என்று கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று வெளியிட்டுள்ளது.

ஆனையிறவுடனான வானொலித் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார் என்றும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## விவரம் சேகரிப்பு

கொழும்பு, ஜூலை 27

கண்டி மாநகர எல்லைக்குள் இருக்கும் பாடசாலைகளில் கல்வி பயிலும் தமிழ் மாணவர் பற்றிய விவரங்களை மத்திய மாகாண கல்வி அமைச்சு சேகரித்து வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

---

## போர் முனைத் தகவல்களை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயலாது — என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

★ பிரபாகரன் ஒரு நாட் காலை எழுந்து "சரி இன்று ஆனையிறவை முற்றுகையிடுவோம்" என்று கூறியதும் முற்றுகை நடக்கவில்லை. ஆனையிறவை முற்றுகையிடுவது குறித்து ஆறு மாதங்களாக அவர்கள் திட்டம் வகுத்து வந்திருக்கிறார்கள்.

★ ஆறு மாதங்களுக்கு முன்னரே அவர்கள் ஆனையிறவைச் சுற்றிவரப் பதுங்கு குழிகள் வெட்டியிருக்கிறார்கள். பொதுமக்களைக் கொண்டே அவற்றை வெட்டியிருக்கிறார்கள். காயமடைவோரை எடுத்துச் செல்வதற்காக பொதுமக்களைக் கொண்டே வீதிகளையும் திருத்தி இருக்கிறார்கள்.

★ விடுதலைப் புலிகளின் வானொலித் தொடர்பு சம்பாஷணைகளை ஒற்றுக் கேட்டபோது புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள், தங்கள் பிரதேசப் பொறுப்பாளர்களை ஆனையிறவு விடயமாக கலந்தாலோசிக்க அழைத்தது தெரியவந்திருக்கிறது.

★ மக்களிடமிருந்து 250 உழவு இயந்திரங்களையும் ஐந்து புல்டோஸர்களையும் இதற்கெனப் பெற்றதும் தெரியவந்திருக்கிறது. மோதலின்போது சேதமடையும் உழவு இயந்திரங்களுக்கு நஷ்டஈடு தரப்படும் என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

★ ஆனையிறவு மோதலில் மரணம் அடைவோருக்குத் தேவையான பிரேதப் பெட்டிகளைச் செய்யுமாறு கூட விடுதலைப் புலிகள் பொது மக்களைக் கேட்டிருக்கிறார்கள்.

★ இம்முறை காயமடைவோர் எண்ணிக்கை அதிகமாக இருக்குமாதலால் அதனைச் சமாளிக்கத் தயாராக இருக்குமாறு டாக்டர்களுக்குக் கூறியிருக்கிறார்கள்.

இந்த விடயங்கள் எல்லாம் அரசாங்கத்தில் உரிய மட்டத்துக்கு அறிவிக்கப்படாமல் இராணுவம் பலமாக உள்ளதாகத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பிரஸ்தாப பத்திரிகை ஆசிரியர் எழுதுகிறார்.

இவ்வாறுதான் யாழ். கோட்டை முற்றுகையின் போதும், எல்லாம் சீராகவும் சாதகமாகவும் இருப்பதாகக் கூறிக்கொண்டு இருந்து விட்டுத் திடீரென ஒரு நாள் இராணுவத் தந்திரங்கள் கருதி யாழ். கோட்டையைக் கைவிட்டு விட்டதாக அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார் என்றும் அவர் மேலும் கிண்டல் செய்கிறார்! (அ)

---

## லொறி நிறைய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பித்தது என்றும்—

புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியது குறித்து அதிகாரிகள் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தனர் என்றும்— திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னார்.

அரசு தேவையற்ற ஆடம்பர நிகழ்ச்சிகளை நடத்தும் அதே வேளை இராணுவத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் உணவு மற்றும் ஆயுதங்கள் போன்றவற்றை வழங்குவதிலும் அக்கறை காட்டவில்லை என்றும் அவர் குறை கூறினார். [ஓ-த]

---

## புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குண்டு வெடிப்பின் சூத்திரதாரியான வரதனுக்கு புகலிடம் அளித்த மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. சந்திரசேகரனைப் பாதுகாக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எத்தனிப்பது எதற்காக?

திரு. சந்திரசேகரன் எதிர்க் கட்சி கூட்டணியில் ஓர் உறுப்பினர். அவர் உள்ளூராட்சி சபை தேர்தல் பிரசாரத்தை நடத்த சுதந்திரக்கட்சி நிதியுதவி அளித்துள்ளதும்—

மலையக மக்கள் முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதும் தெரியவந்துள்ளது.

சுதந்திரக்கட்சி தேர்தல் பிரசாரத்துக்கு வழங்கிய நிதியை திரு. சந்திரசேகரன், புலிகள் ஆயுதங்களை வாங்குவதற்கு அளித்திருக்கலாம் என்று இப்போது சந்தேகம் எழுகிறது— என்றார் அமைச்சர் ரணில். (உ-ஓ-த)

---

## இனப் பிரச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகளுக்கும் இடையில் சண்டைகளைத் தீர்த்து வைக்க மத்தியஸ்த முயற்சிகளைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

இந்தியாவின் முயற்சியாக இருந்தாலென்ன —

இந்தியாவினால் ஆசீர்வதிக்கப்பட்ட வேறு தரப்பினரின் முயற்சியாக இருந்தாலென்ன —

சமாதான முயற்சிகளே இப்போது அவசியம்.

சமாதான முயற்சிகளை ஆரம்பித்தாலும் அவற்றின் விளைவுகளை முன்கூட்டியே கூறுவது கஷ்டம். இருதரப்பினருமே கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். இணக்க நிலை ஒன்றை எட்டுவதாயின் இருதரப்பாருமே தமது அடிப்படை நிலைப்பாடுகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

இருபகுதியிலுமே ஒரு "முற்றுகை மனோநிலை" காணப்படுகிறது. இது நியாயபூர்வமான பேச்சுவார்த்தை அல்லது விட்டுக்கொடுத்தல் இடம்பெறுவதைத் தடுக்கிறது.

சகல தமிழ் இளைஞர்களும் புலிகள் என்று கருதும் படையினர் அவர்கள் அனைவரையும் கைது செய்ய நினைப்பது விசனத்துக்குரியது. இராணுவத்தினர் தமது சந்தேகத்தில் எவரையும் விட்டு வைப்பதில்லை.

[illegible] போகிறார்கள்.

—இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-எ-3)

---

# ஜி. சீ. ஈ (உ/த) பரீட்சை பாட நேர அட்டவணை

யாழ்ப்பாணம், ஜூலை 27

எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் நேர அட்டவணை யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளது. அட்டவணை வருமாறு :-

| | | |
|---|---|---|
| 03-08-91 | மு. ப. 8-30—10-30 | விலங்கியல் i |
| | 8-30—11-30 | பிரயோக கணிதம் i<br>சரித்திரம் ii |
| | பி. ப. 12-30— 3-30 | சரித்திரம் i |
| 05-08-91 | மு. ப. 8-30—11-30 | பிரயோக கணிதம் ii<br>விலங்கியல் ii<br>கிரேக்க ரோம நாகரீகம் i<br>சித்திரம் i |
| | பி. ப. 12-30— 3-30 | மனைப்பொருளியல் i<br>இலத்தீன் i |
| 06-08-91 | மு. ப. 8-30—11-30 | தூயகணிதம் i<br>பௌத்த நாகரீகம் i |
| | பி. ப. 12-30— 3-30 | மனைப் பொருளியல் ii<br>இலத்தீன் ii |
| 07-08-91 | மு. ப. 8-30—10-30 | தாவரவியல் i |
| | மு. ப. 8-30—11-30 | பௌத்தம் i<br>தமிழ் i |
| | பி. ப. 12-30— 3-30 | தூயகணிதம் ii<br>பௌத்த நாகரீகம் ii |
| 08-08-91 | மு. ப. 8-30— 11-30 | தாவரவியல் ii<br>பௌத்தம் ii<br>தமிழ் ii |
| | பி. ப 12-30— 3-30 | சங்கீதம் - சிங்களம் i<br>சங்கீதம் - கர்நாடகம் i<br>சங்கீதம் - மேலைத்தேய i |
| 09-08-91 | மு. ப. 8-30—10-30 | இரசாயனவியல் i |
| | மு. ப. 8-30—11-30 | பொருளியல் i<br>மலாய் i<br>பேர்சிய மொழி i<br>ஹிந்தி i |
| | பி. ப. 1-30— 4-30 | நாட்டியம் - சிங்களம் i<br>நாட்டியம் - பரதம் i<br>அரபு i<br>ஜப்பானிய மொழி i |
| 10-08-91 | மு. ப. 8-30—11-30 | இரசாயனவியல் ii<br>நாட்டியம் – சிங்களம் ii<br>நாட்டியம் – பரதம் ii<br>அரபு - ii<br>ஜப்பானிய மொழி ii |
| | பி. ப. 12-30— 3-30 | சங்கீதம் – சிங்களம் ii<br>சங்கீதம் - கர்நாடகம் ii<br>சங்கீதம்–மேலைத்தேய ii |
| 12-08-91 | மு. ப. 8-30—10-30 | பௌதீகவியல் i |
| | மு. ப. 8-30—11-30 | கணக்கியல் i<br>பாளி i |
| | பி. ப: 12-30— 3-30 | விவசாய விஞ்ஞானம் i<br>ஜேர்மன் i<br>ருஷியன் i<br>உருது i<br>சீனமொழி i |
| 13-08-91 | மு. ப. 8. 30—11. 30 | பௌதீகவியல் ii<br>கணக்கியல் ii<br>பாளி ii<br>ஜேர்மன் ii<br>ருஷியன் ii<br>உருது ii<br>சீனமொழி ii |
| | பி. ப. 12. 30—3. 30 | விவசாய விஞ். ii<br>கிரேக்கரோமநாகரீகம்ii |
| 14-08-91 | மு. ப. 8. 30—11. 30 | பொருளியல் ii<br>மலாய் ii<br>பேர்சிய மொழி ii<br>ஹிந்தி ii |
| | பி. ப. 12. 30—3. 30 | சிங்களம் i |
| 15-08-91 | மு. ப. 8. 30—11. 30 | சிங்களம் ii |
| | பி. ப. 12-30— 3-30 | இந்துசமயம் i<br>கிறிஸ்தவம் i<br>இஸ்லாம் i<br>சமஸ்கிருதம் i |
| 16-08-91 | மு. ப. 8. 30—11. 30 | சித்திரம் ii<br>ஆங்கிலம் i |
| | பி. ப. 1. 30—4. 30 | இந்துசமயம் ii<br>கிறிஸ்தவம் ii<br>இஸ்லாம் ii<br>சமஸ்கிருதம் ii |
| 17-08-91 | மு. ப. 8. 30—11. 30 | சித்திரம் iii<br>ஆங்கிலம் ii |
| | பி. ப. 12. 30—3. 30 | வர்த்தகமும் நிதியும் i |
| 19-08-91 | மு. ப, 8. 30—11. 30 | புவியியல் i |
| | பி. ப. 12. 30—3. 30 | வர்த்தகமும் நிதியும் ii |
| 20-08-91 | மு. ப. 8. 30—11. 30 | புவியியல் ii |
| | பி. ப. 12. 30—3. 30 | இந்து நாகரிகம் i<br>இஸ்லாமிய நாகரிகம் i |
| 21-08-91 | மு. ப. 8. 30—11. 30 | புவியியல் iii |
| | பி. ப. 12. 30—3. 30 | இந்து நாகரிகம் ii<br>இஸ்லாமிய நாகரிகம் ii |
| 22-08-91 | மு. ப. 8. 30—11. 30 | அரசியல் மூல தத்துவங்கள் i |
| | பி. ப 12. 30—3. 30 | அளவை விஞ்ஞானமுறைi |
| 23-08-91 | மு. ப. 8. 30—11. 30 | அரசியல் மூல தத்துவங்கள் 11 |
| | பி. ப, 1. 30—4. 30 | அளவை.விஞ்ஞானமுறைii |
| 26-08-91 | மு.ப. 8. 30—11 30 | கிரேக்கம் i<br>பிரெஞ்சு i |
| | பி. ப. 12. 30—3. 30 | நாடகமும் அரங்கியலும் i |
| 27-08-91 | மு.ப. 8. 30—11. 30 | கிரேக்கம் ii<br>பிரெஞ்சு ii<br>நர்டகமும்,அரங்கியலும் ii |
| | பி. ப. 12. 30—2. 30 | நர்டகமும் அரங்கியலும்iii |

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், காகிதாதிகள் மற்றும் அனுமதி அட்டைகள் வவுனியாவுக்கு வந்து சேர்ந்துள்ளன. அவை ஓரிரு தினங்களில் இங்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காயமுற்ற போராளிகளுக்கு

# தாராளமாக உதவுமாறு புலிகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

போர்முனையில் காயமுற்று மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் போராளிகளுக்கு பொதுமக்கள் தாராளமாக உதவிகள் வழங்குமாறு, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

போராளிகளுக்கு வேண்டிய மெத்தைகள், தலையணைகள், இளநீர், படுக்கைவிரிப்புகள், பழைய துணிகள் போன்றவற்றை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தைச் சேர்ந்தோர் வீடு வீடாகச்சென்று சேகரிக்க உள்ளனர். அவர்களுக்குத் தாராளமாக வழங்கி உதவும் வண்ணம் வேண்டுகிறோம்.

சேகரிப்பில் ஈடுபடும் மாணவ இயக்கத்தினருக்கு வட்டவை, சிற்றூரவை உறுப்பினர்களும், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திக் கழகங்கள், தொழிற் சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்களும் முழு ஒத்துழைப்பை வழங்குமாறும் வேண்டுகிறோம்.

இவற்றைவிட பதுங்குகுழி, காவல் அரண்களுக்கான சாக்கு, மண்வெட்டி போன்ற ஏனைய பொருள்களைச் சேகரிப்பதில் வட்ட அவை, சிற்றூரவை உறுப்பினர்களும், பொது நிறுவனங்களும் கூடிய கவனம் செலுத்தி ஈடுபடுமாறு வேண்டுகிறோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# அரசியல் தீர்வு பிரேரணை விவாதம் இன்றி ஏற்பு

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்று கோரும் சுதந்திரக் கட்சி எம். பி. மங்கள முனசிங்காவின் தனிநபர் பிரேரணையை விவாதம் இன்றி ஏற்றுக்கொள்வது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

திரு. முனசிங்கா நாடாளுமன்றத்தில் இப்பிரேரணையைக் கொண்டு வரப்போவதாக முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்றும் அப்பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

திரு: மங்கள முனசிங்காவின் தனிநபர் பிரேரணையை ஏற்றுக்கொண்டு ஆதரிப்பது என்று அமைச்சரவை கடந்த புதனகிழமை முடிவு செய்திருந்தது. [இ-எ]

### காவிரி நீர் பிரச்சினை எதிரொலி:

# இந்திய நாடாளுமன்றில் நேற்று கூச்சல்! குழப்பம்!!

புதுடில்லி ஜூலை 27

தமிழ்நாட்டிற்கும், கர்நாடக மாநிலத்துக்கும் இடையிலான காவிரி நீர் பிரச்சினை நேற்று இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் எதிரொலித்தது. இரு சபைகளிலும் கூச்சலும், குழப்பமும் நிலவின.

கேள்வி நேரம் முடிந்தவுடனேயே இந்த இரு மாநிலங்களைச் சேர்ந்த எதிர்க்கட்சி, ஆளுங் கட்சி உறுப்பினர்கள் காரசாரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

காவிரி நீர் பிரச்சினை குறித்து பிரதமர் அறிக்கை வெளியிடவேண்டும் என்று உறுப்பினர்கள் கோரினர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ், அ. தி. மு. க. மற்றும் தி. மு. க. உறுப்பினர்கள் அவைகளிருந்து வெளியேறினர். [ஓ-த]

# தமிழகத்தில் அமைதியான பொது வேலை நிறுத்தம்

சென்னை, ஜூலை 27

காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக தமிழக அரசு ஏற்பாடு செய்திருந்த 12 மணி நேர பொது வேலை நிறுத்தம் நேற்று முழுமையாகவும் அமைதியாகவும் நடந்து முடிந்தது.

இந்த வேலை நிறுத்தத்துக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்திருந்தன. தமிழக அரசு நேற்றைய தினத்தை பொது விடுமுறை தினமாக அறிவித்திருந்தது.


## விதைகள் தேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு (T.R.R.O) பின்வரும் விதைகள் தேவைப்படுகின்றன. இவற்றை விநியோகிக்கக் கூடிய விதைக் கமக்காரர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தேவைப்படும் விதைகள்:

பாசிப்பயறு, கௌபி, குரக்கன், எள்ளு, வெண்டி, கத்தரி, நீளப்பயிற்றை, பாகல், புடோல், தக்காளி.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
[T. R. R O.]
106, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[சி-0310]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] கத்தில் உள்ள அச்சகத்தில் 27-07-1991 இல் அ[illegible] விடப்பட்டது.

## அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் இயங்குகின்ற அனைத்து மன்றங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கும், வகுப்புப் பிரதிநிதிகளுக்குமான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு தொழில் நுட்பக்கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மாணவர் அவை அறிவித்துள்ளது. (ஒ)

## களத்துக்கு பொது மக்கள்

கோப்பாய். ஜூலை 27

போர்க் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு உதவுவதற்காக கோப்பாய் வட்டவைக்கு உட்பட்ட சிற்றூர் அவை உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று ஆனையிறவுப் போர் களப் பகுதிக்குச் சென்றுள்ளது. [ஒ-72]

## ஆணின் சடலம் ஒதுங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 27

பூநகரி கல்முனைக கடலில் நேற்று முன்தினம் ஆண் ஒருவரின் சடலம் பழுதடைந்த நிலையில் கரை ஒதுங்கியது.

மண்ணித் தலையைச் சேர்ந்த எஸ். பொன்னம்பலம் (56 வயது) என்பவரின் சடலம் என பின்னர் அடையாளம் காணப்பட்டது.

சம்பவ தினத்திற்கு நான்கு நாட்களுக்கு முன் இவர் காணாமற் போனதாகச் சொல்லப்பட்டது.

(ஓ-15)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் புதனன்று நடந்த மோதலில் காயமுற்ற வீரவேங்கை தேவா (சி. சந்திரமோகன் - மட்டக்களப்பு) நேற்று வீரமரணம் அடைந்தார்.

இவரது புகழுடல் நேற்று அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ஒ)

## மீண்டும் படகுச் சேவை

நெடுந்தீவு, ஜூலை 27

கடந்த இருபது நாட்களின் பின்னர் நேற்று நயினாதீவு, அனலைதீவுக்கான படகுச் சேவைகள் நடைபெற்றன.

எனினும் நெடுந்தீவுக்கான படகுச் சேவை இன்னமும் ஆரம்பமாகவில்லை.

(ஒ-111)

## ராவின் விஜயம் திடீரென ரத்து

சென்னை, ஜூலை 27

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இன்று தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்ய இருந்தார். ஆனால் அவரது விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுவிட்டதாக தமிழக அரசு நேற்று அறிவித்தது.

காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

(ஒ-த)

## இலங்கையின் நாணய மதிப்பு குறையாது

கொழும்பு, ஜூலை 27

இந்தியாவைப் பின்பற்றி இலங்கை நாணய மதிப்பைக் குறைக்காது.

நிதி அமைச்சுச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் இதனை செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார்.

இந்தியா தனது நாணய மதிப்பைக் குறைத்ததினால் [illegible] இல்லை என்றும் அவர் கூறினார்.

(இ - எ)

### ஒரு மாதத்தில் மட்டும்

# மடு முகாமில் அகதிகள் 30 பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஜூலை 27

மடு அகதிமுகாமில் ஒரு மாதத்தில் மட்டும் 30 பேர் இறந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடும் வரட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் பிரச்சினையால் சரியான முறையில் முகாமின் சுகாதார சேவை மேற்கொள்ளப்படவில்லை - இதனால் வயிற்றோட்டம் போன்ற வியாதிகள்பரவி பலர் மரணமானதாகவும்—

மேலும் பலர் மருத்துவ வசதியின்றி அவதியுறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

# இராணுவத்தில் சேருவதற்கு 20 ஆயிரம் இளைஞர்கள்!

## நேற்று கொழும்பில் கூடினராம்

கொழும்பு, ஜூலை 27

ஸ்ரீலங்கா பாதுகாப்பு படையில் சேர்ந்து கொள்வதற்காக நேற்று கொழும்பு நகரில் 20 ஆயிரம் இளைஞர்கள் கூடினராம்!

கொழும்பு ரீட் அவெனியூவில் நேற்று நடந்த நேர்முகப் பரீட்சைக்காக இவர்கள் வரிசையில் காத்து நின்றனர்.

சம்பந்தப்பட்ட இளைஞர்களுடன் அவர்களது பெற்றோர்கள் பலரும் வந்திருந்தனர்.

வடக்கில் போரிடும் இராணுவத்தினருடன், தாங்களும் இணைந்து கொள்ள விரும்புவதாக அங்கு கூடியிருந்த இளைஞர்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனராம்.

இது போன்ற நேர்முகப் பரீட்சைகள் கண்டி, மாத்தறை, மின்னேரியா, குருநாகல் போன்ற இடங்களிலும் நடைபெறவுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று மாலை இலங்கை வானொலிச் செய்தியில் இவ்வாறு தெரிவிககப்பட்டது.

[ஒ-த]

# 14 ஆம் திகதி வரை மட்டும் 88 சிப்பாய்கள் பலி!

விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் இம்மாதம் 14 ஆம் திகதி வரை மட்டும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 88 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

இம்மாதம் 14ஆம் திகதியே வெற்றிலைக்கேணி -கட்டைக்காடு பகுதியில் ஆயிரக் கணக்கான படையினர் தரையிறக்கப்பட்டனர் என்பதும்—

அதன் பின்னர் அங்குள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் பலமுறை தாக்கியதில் நூறுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர் என்பதும் தெரிந்தவையே. [ஒ-த]

### உடன்பாடு ஏற்படும் வரை

# இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பக் கூடாது

## டில்லி அரசுக்கு மகஜர்

சென்னை, ஜூலை 27

இலங்கைத் தமிழர் தொடர்பாக ஓர் உடன்பாடு காணப்படும் வரை தமிழகத்தில் உள்ள அந்த நாட்டுத் தமிழ் அகதிகளை, திருப்பி அனுப்பக்கூடாது என்று இந்திய — இலங்கை நட்புறவுக் கழகத்தின் போஷகரும். முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமானவி.ஆர். கிருஷ்ணஐயர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இது தொடர்பான மகஜர் ஒன்றை அவர் புதுடில்லி அரசுக்கும் தமிழக அரசுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கை அகதிகளை கவனிக்கும் நிலையில் இலங்கை அரசு இல்லை எனினும் உள்நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்துள்ள 10 லட்சம் அகதிகள் இலங்கையிலேயே அவதிப்பட்டு வருகின்றனர். அதனால் இனப்பிரச்சினைக்கு இறுதியாக ஒரு தீர்வு காணப்படும் வரை இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பக் கூடாது என்று திரு. கிருஷ்ணஐயர் மகஜரில் வலியுறுத்தியுள்ளார்.

[இ-எ]

## மரண அறிவித்தல்

### அல்போன்ஸ் குணரட்ணம்

அந்தோனிப்பிள்ளை அல்போன்ஸ் குணரட்ணம் சுவிற்சலாந்தில் அகால மரணமானார்.

இவர் பலாலி வடக்கைச் சேர்ந்த அலெக்சாண்டர் அந்தோனிப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் அருமை மகனும், ஞானரட்ணம் (கனடா), யோகரட்ணம் (சுவிற்சலாந்து), ஜெனிற்றா, வசந்தரட்ணம், ஜீவரட்ணம், அரசரட்ணம், மெனிற்ரா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக தும்பளை புனித மரியாள் தேவாலயத்தில் 27-7-1991 சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு இரங்கற் பலி ஒப்புக் கொடுக்படும்.

தகவல்:

அலெக்சாண்டர் அந்தோனிப்பிள்ளை
(தந்தை)

தும்பளை,
பருத்தித்துறை.

[17454]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org